நல்லூர் பிர. நூலகம்
மா நகரசபை, முன்றம்
யாழ்ப்பாணம்
23 JUN 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 09 வெள்ளிக்கிழமை (23 - 06 - 2000) VALAMPURI ஒலி: 186

## தென்மராட்சியிலிருந்து வன்னி சென்ற
# மக்களுக்கு நிவாரணம் வழங்க
# அரசிடம் தற்போது நிதி இல்லை

### அரச அதிகாரிகள் மாநாட்டில் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு விசேட நிருபர்)

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வன்னிக்கு வந்துள்ள பல நூற்றுக் கணக்கான குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு உள்ளூரில் உற்பத்தியாகும் நெல்லை கொள்வனவு செய்வதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்கள நிதி உதவி வழங்குமாறு கோரியிருந்தனர்.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்திடம் போதிய நிதியுதவி இல்லையென வடபகுதி புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் நிலவும்யுத்த சூழ்நிலை, இடம் பெயர்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சர் கலாநிதி சரத அமுனுகம தலைமையில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் கூறப்பட்டது.

இம்மாநாட்டில்யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன், மன்னார் அரச அதிபர் ரி. விஸ்வலிங்கம், கிளிநொச்சி அரசஅதிபர் ரி. ஐயாத்துரை, முல்லைத்தீவு அரச அதிபர் எஸ். சுந்தரம், வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு அரசாங்க அதிபர்களும் தங்கள் தங்கள் பகுதிகளில் நிலவும் யுத்த சூழ்நிலையினால் அப்பாவிப் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு அரசும ஐ. தே. கட்சியும் இணக்கம்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனைகளை விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பி வைப்பதென அரசும், ஐக்கியத்தேசியக்கட்சியும் இணக்கம் கண்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்றுமுன் தினம் இடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யூலை 25ம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை?

உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்த யோசனைகள் இம்மாதம் 25ம்திகதிபாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து நம்பகரமாக அறிய வந்துள்ளது.

உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்த யோசனைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளித்தால் என்ன ஆதரவளிக்காவிட்டால் என்ன எப்படியும் சீர்திருத்த யோசனைகள் 25ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

யூலை மாத இறுதிக்குள் அரசியல் அமைப்புச் சீர்திருத்த யோசனைகளைஎப்படியும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டுமென்பதில் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா ஆர்வத்துடன் இருப்பதாக அரச வட்டாரங்களும் தெரிவித்துள்ளகாகமற்றொரு செய்தி தெரிவிக்கிறது. (வ)

## யாழ். மாநகரசபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க உடன் நடவடிக்கை

யாழ்ப்பாண மாநகரசபையில் நிதிப்பற்றாக்குறை காரணமாக அமைய ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனை தவிர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும். ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான வி.கே. ஜெகன் நேற்று உள்ளூராட்சி அமைச்சர் அலவி

(6ஆம் பக்கம் பார்க்க)

## இடியப்ப விலை அதிகரிப்பு பா.மன்றம் வரைசென்றது

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வை எடுத்துக் காட்டும் வகையில் சாதாரண மக்களின் உணவான ''இடியப்பம்'' பாராளுமன்றம் வரை சென்றுள்ளது.

விலைவாசி உயர்வினால் 60சதம் விற்ற இடியப்பம் திடீரென ஒரு ரூபாவாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைக் கப்பல் வருகை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு இன்று வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும் செஞ்சிலுவைக் கப்பலில் யாழ். குடாநாட்டிற்கான 194 வெளியூர்த் தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக் கப்பலில் 21 நோயாளர்களும் பராமரிப்பாளர்களும் வருவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க-03)

## கணனி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கணனிப் பயன்பாட்டிற்கான தேசிய சான்றிதழ் பரீட்சைக்காக யாழ். மத்திய கல்லூரியின் கணனி வள நிலையத்தினூடாக உள்வாரி மாணவர்களாக விண்ணப்பித்த மாணவர்களுக்கான நாளாந்த பகல் நேர வகுப்புகள் நாளை 24 ஆம் திகதி காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 3-00 மணி வரை நடைபெறுமென மேற்படி கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

வாரநாட்களுட்பட சனி, ஞாயிறு தினங்களில் மேற்படி பயிற்சி வகுப்புகள் இடம்பெறுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கரை ஒதுங்கிய சடலம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் கரை ஒதுங்கிய ஒரு ஆணின் சடலம் அப்பகுதி பொலிசாரினால் கடந்த 21 ஆம் திகதி இரவு யாழ் போதனா வைத்திய சாலையில ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (க-12)

## இன்று கடையடைப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையில் இன்று 23 ஆம் திகதி பூரண கடை அடைப்பு மேற்கொள்ளுமாறு வட்டுக்கோட்டை வர்த்தகர் சங்கம் சகல வர்த்தகர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப் பகுதியில் தொடர்ந்து இடம் பெறும் திருட்டுக்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே மேற்படி கடையடைப்பு இடம்பெறுவதாக வட்டுக்கோட்டை வர்த்தகர் சங்கம்அறிவித்துள்ளது. (க-வ)

## ஊரடங்கு அறிவித்தல்

யாழ். பிரதேச செயலர் பிரிவில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் காலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும். (ச)

## நிறுவுநர் நினைவு நாள்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த நிறுவுநர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் இப்போதுள்ள சூழலைக் கருத்தில் கொண்டு மிகவும் எளிய முறையில் நாளைக் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

## இளைஞர் காயம்

யாழ்.நகரப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி வெடிச் சம்பவத்தில் தமிழ் அமைப்பு ஒன்றின் உறுப்பினர் ஒருவர் முகத்தில் கடுங்காயத்துக்குள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தமிழ்ச் சங்கத்திற்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கத்திற்கு விரைவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் வலி.மேற்கு பிரதேச சபைத்தலைவர்என். திரிலோகநாதனின் வேண்டுகோளையடுத்து இதற்கென ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இக் கட்டடம் சித்தன்கேணி மகா கணபதி கோவிலுக்கருகில் அமைக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ந)

## சங்காபிஷேகம்

தொல்புரம் வளக்கம்பரை அம்மன் ஆலயத்திலும், சித்தன்கேணி மஹா கணபதி ஆலயத்திலும் இன்று சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (ந)

## புதிய கல்வி ஆண்டு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் புதிய மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளை உடன் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பயிற்சிக் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களுக்கான கடிதங்களை யாழ் அரச அதிபர் கொழும்பிலிருந்து எடுத்து வருவாரெனவு ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளர் க.மணி பல்லவராஜன் நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார். (ந)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழியில் ஆறுமாதப் பயிற்சி. கடைசித் தகமை க.பொ.த.(சாதாரணதரம்) பாலர் ஆசிரியர் சங்கம் கொக்குவில். (1130)

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் கெமரா எலக்ரோனிக் பிளாஸ் கன்: புகைப்படத் துறை சார்ந்த கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும் ரகுபோட்டோ டெக்னிக் 301- கஸ்தூரியார் வீதி மேல்மாடி (கன்னாதிட்டிசந்திக்கருகில்.) (1118)

### விற்பனைக்கு உண்டு

M. K. 25 இந்தியன் வாட்டர்ப்பம், பயனியர் அம்பிலியர்செற்95W, ரைப்றைற்ரர், NV 7500 டெக், J.V.C டெக் [உதிரிப்பாகத்துக்கு] மோட்டர், CDபிளயர் A/C, D/C சைனா ஏசியா, துவிச்சக்கர வண்டி, 2 ஸ்ரீரியோ பொக்ஸ் 40W ஆகியன விற்பனைக்குள்ளது. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பார்க்கலாம். தொடர்பு இ. ஜனார்த்தனன் சுதுமலை வடக்கு, மானிப்பாய். [1194]

### தவறிவிட்டது

குரும்பசிட்டி கிழக்கைச் சேர்ந்த சூரியன் ஜெயராசா என்பவருடைய தே. அ. அ. இல 680392358V வி. அ. அ. இல 0907017443 என்பன சுன்னாகம், மல்லாகம். என்ற வீதியில் தவறிவிட்டது: கண்டெடுத்தவர் குரும்பசிட்டி கிராமசேவகர் திரு: தட்சணாமூர்த்தி என்பவரிடம் ஒப்படைக்கவும். (1198)

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் ஜெயரஞ்சன் கரிகரன் என்பவருடைய பாடசாலை அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை (இல, 0905027156) சுடுகாட்டாலடிச்சந்திக்கும் நவாலிக்கும் இடையில் தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும் நவாலிகிழக்கு மானிப்பாய் .கி.சே.பி J 135, தொ.இல-2121. (1206)

### மயிலணி முருகன் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 2ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஜூலை 6 ஆம்திகதி இரதோற்சவமும்7 ஆம்திகதிதீர்த்தோற்சவமும் நிகழவுள்ளன. (கி)

### கண்டெடுக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

பொலிகண்டி மேற்கு அரசம்புலம் என்ற முகவரியில் வசிக்கும் பழனி சாந்தகுமாரி என்பவரது விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குரும்பசிட்டியை வதிவிடமாகவும் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொண்ட சூரியன் ஜெயராசா என்பவரது தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

---

INSTITUTE OF INFORMATICS STUDIES — IIS

## Degree of Bachelor Of Information Technology (BIT) University Of Colombo

### 3 வருடங்களில் கணனித்துறையில் நீங்களும் ஓர் பட்டதாரியாகலாம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் எமது நிறுவனத்தின் ஏற்பாட்டின் கீழ் கணனி தகவல் தொழில் நுட்பத்தில் யாழ். மாவட்ட மாணவர்களும் பட்டதாரியாகும் சந்தர்ப்பம்.

* கல்வியாண்டு 2000ம் ஆண்டிற்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டுள்ளன எமது நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாது ஆர்வமுடைய அனைவரும் விண்ணப்பிக்கவும். எமது நெல்லியடி கிளை அலுவலகத்திலும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
* பதிவுகள், விரிவுரைகள், செய்முறைப் பயிற்சிகள் யாவும் எமது நிறுவனத்தாலே மேற்கொள்ளப்படும்.
* விண்ணப்ப முடிவுத் திகதி:- 29- 06- 2000
* உடனடியாக எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முடிவுத் திகதி எக் காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது.

இயக்குநர்
IIS

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-546]

---

## திருமண ஆயத்தப் பயிற்சிநெறி

எதிர்வரும் யூலை மாதத்தில் திருமணம் செய்யவிருப்பவர்களுக்கான திருமண ஆயத்தப்பயிற்சிநெறி இம்மாதம் 24ம், 25ம்திகதிகளில் (சனி, ஞாயிறு) மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

நிலைய இயக்குநர்
"அகவொளி"

(1197)

---

## விற்பனைக்குண்டு

13, K.V.A. லிஸ்ரர் ஜெனறேற்றர்
விற்பனைக்குண்டு.
த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-545)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது தொழில்நுட்பக் கல்லூரி N. C. M
2ம் வருட மாணவன் பிரபாகரன் (கோபி)
அவர்களின் அன்புத் தாயாரின் திடீர் மறைவை ஒட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

N. C. M 2ம் வருடமாணவர்கள்.

[1204]

---

## இதய அஞ்சலி!

எமது உற்றநண்பன் நிக்ஸன்ராஜ் அவர்களின்
அன்புத் தந்தை செல்லர் கந்தசாமி
அவர்கள்

இறைபதம் அடைந்த செய்தி அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் தந்தன. துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள். ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்தித்து கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

தகவல்
97 O/L நண்பர்கள்

ஆர்க்லேன்,
உடுவில்.

ரலன்த் நியூசன்,
உடுவில்.

(1201)

---

## தகவல்தரவும்

சாவகச்சேரி பொலிஸ்நிலைய ஒழுங்கையைச்சேர்ந்த திருமதி வைகுந்தம், திருமதி வனசமாலா, லோகநாதன், புனிதமலர் ஆகியோரையும், சாவகச்சேரி இராமலிங்கம் வீதியைசேர்ந்த நிர்மலன், ஸ்ரீதரன், சாவகச்சேரி ஆஸ்பத்திரி முன் திருமதி சுந்தரலிங்கம் நந்தகுமார் ஆகியோரை, Dr. V. குகதாஸ் (Dental Surgeon) அவர்களை யாழ். போதனா வைத்திய சாலையில் உடனடியாக சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
திருமதி. ம. நடராஜா
[உறவினர்]

[1211]

---

## ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

டச்சுவீதி, — சாவகச்சேரி.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு கடன் எடாத, பிணை வையாத அங்கத்தவர்களுக்கு சேமப்பணத்திலிருந்து அரைவாசி கொடுப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விரும்பியவர்கள் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(சனி, ஞாயிறு)

கலா நிலையம்,
வதிரி, நெல்லியடி வடக்கு.

தலைவர்,
சி. ரவீந்திரநாதன்

(1202)

---

## கணனிப் பயிற்சி

யாழ். மாவட்டத்தில் நவீன கணனித்தொழில் நுட்பத்தினையும், சிறந்த கணனிப்பயிற்சியினையும் வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

## UNIVAC
## COMPUTER INFORMATION TECHNOLOGY

* NCCA பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விரிவுரைகளும், செயன்முறைப் பயிற்சியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் 28. 06. 2000 திகதி வரை விண்ணப்பிக்கலாம்.

Director
UNIVAC

மகளிர் அபிவிருத்தி நிலையம்
ஆடியபாதம் றோட்,
திருநெல்வேலி.

கே.கே.எஸ். றோட்,
நாச்சிமார் கோவில்,
யாழ்ப்பாணம்.

(1190)

---

## PERSONAL CLASS

இணைந்த கணிதம் N. A. சயனன் B. Sc
பிரிவு I 2002 4 P. M
நேர்கோட்டு இயக்கம்
பிரிவு II 2002 3 P. M.
திரிகோண கணிதம்
எறியம்- 2001 7 a. m.
ஆரம்பம்: 24 - 06 - 2000 (சனி)
இடம்:- மக்கள் வங்கியடி,
வளாக வீதி, திருநெல்வேலி.

[1209]

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமை புரியும்

திரு. ச. கந்தராஜேஸ்வர சர்மா
அவர்களின் அன்பு மாமனார்

### ஐயாத்துரைக்குருக்கள் இராமலிங்கக்குருக்கள்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
வேலணைப் பிரதேசசபை.

(1214)

## யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திக்கு உதவி நல்கிட ஆஸி.தமிழர்கள் பேரார்வம்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியாவுக்கு சமீபத்தில் இருமாதகால தனிப்பட்டவிஜயம் ஒன்றினை மேற்கொண்டுவிட்டு தற்போதுநாடுதிரும்பியுள்ளயாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் செல்வி, நவமலர் சனகரத்தினம் அங்குகுள்ள இலங்கைத்தமிழ் மக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை எதேச்சையாக சந்தித்து சம்பாஷிக்கக்கிடைத்த வாய்ப்புகளை பயனுள்ள வகையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் மேம்பட்ட அபிவிருத்திக்கானதாக ஆக்கிக் கொண்டுள்ளார்.

அவர்களிடம் இவ்வைத்திய சாலையின் அபிவிருத்திக்கான சீரியதிட்டங்களுக்கு அவர்கள் மனமுவந்து தாராள உதவிகளை வழங்க வேண்டுமென்று பணிப்பாளர் நயந்து கேட்டுக்கொண்டார்.

இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டஅவர்கள்தம்மால் இயன்றநிதியுதவியினைகாலக் கிரமத்தில் தாம் நிச்சயம் வழங்குவதாக உறுதியளித்துள்ளனர்.

சி)

## மாணவர் பிரச்சினை குறித்து முக்கிய கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

தற்போதைய பதற்ற சூழ்நிலையினால் தென்மராட்சி மற்றும் யாழ். நகரிலிருந்து இடம் பெயர்ந்த ஆசிரியர், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான முக்கியகலந்துரையாடல் ஒன்று மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்ந. தணிகாசலம் பிள்ளை தலைமையில் நாச்சிமார் கோவிலில் இடம் பெற்ற மேற்படி கலந்துரையாடலில் இவ்வருடம் க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு தோற்றும் மாணவரின் கல்வி குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார். [க-3]

## தென்மராட்சிப் பாடசாலைகளை வடமராட்சியில் இயங்க நடவடிக்கை

(மந்திகை)

செயலற்றுள்ள தென்மராட்சிவலயப் பாடசாலைகளை வடமராட்சிப்பகுதியில் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதற் கட்டமாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆண்டு 11பற்றுமக.பொ.த. (உ/த) ஆகிய வகுப்புகளையும் ஏனைய வகுப்புகளையும் தனியார் கல்வி நிலையங்களிலும் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வகுப்புக்கள் அனைத்தும் காலை 8.30 முதல் பி.ப 1 மணி வரைநடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஏனைய மாணவர்களுக்கான வகுப்புகளை வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் பிற்பகல்1 மணி முதல் இயங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

(சி-23)

## விநியோகம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிறுவனங்களினூடாக பங்கீட்டு அட்டைக்கு,குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு ஒரு கிலோ வீதம் மா விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

(சி-14)

## கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாதிப்புக்குள்ளாகி இடம் பெயர்ந்துள்ள வர்த்தக சமூகத்திற்கு மற்றைய சங்கங்கள் உதவி, ஒத்தாசைவழங்க வேண்டும் என்று யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் வி. திருநாவுக்கரசு கேட்டுக்கொண்டுள்ளார்.

யாழ். வணிகர் கழகம், நல்லூர் வணிகர் கழகம், குருநகர் வர்த்தகர் சங்கம், பளை வர்த்தகர் சங்கம், கொடிகாமம் வர்த்தகர் சங்கம், சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் ஆகியவற்றிற்கு அவர்கள் அடைந்துள்ள பெரும் யுத்தப்பாதிப்புக்கள் குறித்து சம்மேளனம் தனது ஆழ்ந்த கவலையையும் வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ)

## பயிற்சி வகுப்புகள்

(அரியாலை)

யாழ். நல்லூர் சென்ற் பெனடிக் வித்தியாலய தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை வகுப்புக்கள் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய கட்டடத்தில் நடைபெறுகின்றன. (க-106)

## கும்பாபிஷேகம்

(புலோலி)

தென்புலோலி உபயகதிர் காமக்கந்தன் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகும். முதல் நாளான 2ஆம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் தொடங்கும் தொடர்ந்து அரைமண்டல அபிஷேகம் நடைபெற்று சங்காபிஷேகமும் நிகழுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

[சி-52]

## இடம்பெயர்ந்தோர் கல்வி கற்க மாலை நேர பாடசாலை

### கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பாடசாலைகளில் கல்வி கற்று இடம் பெயர்ந்துள்ள மாணவர்கள் கல்விகற்பதற்காக வலிகாம வடமராட்சிக் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பின்வரும் பாடசாலைகளில் மாலை நேரத்தில் பாடசாலை இயங்குவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக மேற்படி வலய கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு இம் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதிபெறுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கல்வி வலயம்

(1) யா/விக்கினேஸ்வரா ம. வி கரவெட்டி.

(2) யா/நெல்லியடி ம.ம.வி

(3) சதா பொன்ஸ் கல்வி நிலையம், மாலுசந்தி.

(4) மாணவர் கலாசாலை கரவெட்டி.

(5) யா/ஞானசாரியார் கல்லூரி கரவெட்டி.

(6) கணிதக் கல்வி நிலையம் நெல்லியடி.

வலிகாமம் கல்வி வலயம்

[1] சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி.

[2] வட்டு இந்துக்கல்லூரி.

[3] இணுவில் மத்திய கல்லூரி.

[4] அராலி சரஸ்வதி வித்தியாலயம். [க]

## வன்னியில் மருந்துக்குத் தட்டுப்பாடு

(வவுனியா)

வன்னிப்பகுதி மருந்துக்கள் இன்றி பெரிதும் கஷ்டப்படுவதாக வன்னியில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னிப்பகுதிக்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு எவ்வளவு முயற்சிகள்எடுக்கப் பட்டுவந்தபோதும் அம் முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை என்று வவுனியாவில் உள்ள பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (வ)


கொக்குவில், இணுவில், மானிப்பாய் வட்டம்



லயன்ஸ் கழகங்கள்

ஒருங்கிணைந்து நடத்தும்

விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான

# இலவச கண்பரிசோதனை முகாம்

காலம் : 25- 06- 2000 (ஞாயிறு) காலை 7.30 மணி (பு. நே)
இடம் : கிராம முன்னேற்ற சங்க மண்டபம், கொக்குவில்மேற்கு
[ குளப்பிட்டி - ஆனைக்கோட்டை றோட் ]

கண் பரிசோதனை மேற்கொள்பவர் :
யாழ். போதனா வைத்தியசாலை - கண் சத்திரசிகிச்சை நிபுணர்

**வைத்திய கலாநிதி S. குகதாசன்** அவர்கள்

இப்பொழுதுள்ள சூழ்நிலையினால் இடம்பெயர்ந்து வாழும் நலிவுற்றோருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் ஏனையோருக்கு முகாமிற்கு வருகை தரும் ஒழுங்கின் படி பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு: கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன அத்துடன் தேவை ஏற்படின் நலிவுற்றோருக்கு மட்டும் கண்ணாடிவில்லை பெற்றுக் கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் பிரமுகர்களுடன் தொடர்பு கொள்க.

லயன் P. கமலநாதன் — தலைவர் — கொக்குவில் கழகம்;
லயன் K. தேவராஜா — தலைவர் — இணுவில் கழகம்.
லயன் Dr. உரோமகேஸ்வரன் — தலைவர் — மானிப்பாய் வட்ட கழகம்;

சேவை இணைப்பாளர்: லயன் S. S. தங்கராஜா
மாவட்ட தலைவர் - (கழக வளர்ச்சி)

சேவை பிரசுர உதவி:
லயன் R. சிறிகாந்தன் — காவேரி மருந்தகம் கொக்குவில்.
லயன் R. செல்வநாதன் — நியூலக்சுமிரேடர்ஸ், கொக்குவில்

(1163)



## இடம்மாற்றம்

யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த

**J-S-R றேடியோ சென்ரர்**

தற்போது, சுன்னாகம் பழைய பொலிஸ் நிலையம் முன்பாக 100, வசந்திஜா எலக்ரிக்கலில் இருப்பதால் I. C. ரான்சிஸ்ரர் போன்ற றேடியோ பாட்ஸ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(1195)


## துயரடைகின்றோம்

எமது ஆலய பிரதம குருவும் எமது மன்றஸ்தாபகருமான

**சிவஸ்ரீ கு.சோமசுந்தரக்குருக்கள்**

அவர்களின் ஏக புத்திரனும் எமது மன்ற உறுப்பினருமான

**பிரம்மஸ்ரீகோபாலகுமாரசர்மா**

அவர்கள் 9-6-2000 அன்று அகாலமரணமடைந்தமையிட்டு ஆற்றொணாத்துயரடைகின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

மட்டுவில் கல்வம் வீரகத்திவிநாயகர்,
ஆலய பரிபாலனசபை மட்டுவில்,
இந்து இளைஞர் மன்றம்.

(1192)

## நெஞ்சை விட்டகலா ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 | 11 | 1938

மறைவு 29 | 06 | 1994

அமரர்

**இராமுப்பிள்ளை இராமச்சந்திரன்**

(Electrical Foreman)

திதி - 2000. 06.23

நடமாடும் வீட்டில் இன்று
படமாக ஆனீர்கள் உயிர்
வடமாக நின்றீர்கள் எங்கள் நெஞ்சத்
தடத்தில் என்றும் நிறைந்தீர்கள்.

859/34 A, கோயில் வீதி, நல்லூர்.

பிரிவால் துயருறும், மனைவி, மக்கள், உறவினர்கள்.

(1160)

# மீண்டும் காஷ்மீருக்கு தன்னாட்சி உரிமை எதிர்க்கட்சிகளிடையே பெரும் எதிர்ப்பு

(புதுடில்லி)

காஷ்மீரில், 1953 ஆம் ஆண்டின் முன் நிலவியது போன்ற தன்னாட்சி உரிமை நிலை மீண்டும் நிலை நிறுத்தப்பட வேண்டும் எனும் ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சியின் வாதத்திற்கு, பல்வேறு எதிர்க்கட்சிகளிடையேயும் இருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

காஷ்மீர் சட்டமன்றத்தில், காஷ்மீருக்கு மேலதிக சுயாட்சி பற்றிய விவாதம் அண்மையில் ஆரம்பமான வேளை, பாரதீய ஜனதாக் கட்சி, காங்கிரஸ் கட்சி ஆகிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர்.

சிறிதுநேர இடைவெளியில் மீண்டும் சபையில் பிரவேசித்த மேற்படி கட்சி உறுப்பினர்கள், தமது அதிருப்தியினைத் தெரிவிக்கும் வகையில் தலையில் கறுப்புத்துணி அணிந்து காணப்பட்டனர்.

அத்துடன் காஷ்மீர் மக்களை பிரதிநிதித்துவம் செய்ய, ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சிக்கு உரிமை ஏதும் கிடையாதென மிகவும் கடுமையான வகையில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேசமயம், காஷ்மீருக்கு மேலதிக சுயாட்சி வழங்குவது பற்றிய விவாதத்தில் பேசிய முதலமைச்சர் பரூக் அப்துல்லா, ஒருங்கிணைந்த ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைக் கட்டிக்காக்க தாம் உறுதி பூண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

1953 வரை தன்னாட்சியுடையதாய் இருந்த காஷ்மீர் மாநிலத்தின் சுயாட்சி அந்தஸ்து, 1960 இன் பின் மற்றைய மாநிலங்களை விடவும் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-உ)

# செய்திப்பரல்

★ இந்திய வம்சா வழியினர் பிஜி அரசியல் அங்கம் வகிப்பதை புரட்சிக் குழுத் தலைவர் சம்மதித்துள்ளார்.

★ கத்தோலிக்க ஆயர் மகாநாட்டின் தலைவரும் டில்லியின் பேராயருமான அலன்டிலான்டிக் போலந்தில் காலமானார்.

★ காஷ்மீருக்கு மேலும் இரண்டு படை அணிகளை இந்திய மத்திய அரசு அனுப்பியுள்ளது. (து)

# குழந்தைகள் காப்பகத்தில் தீ விபத்து பன்னிரு பச்சிளம்பாலகர் பலி

(பிறேசிலியா)

பிறேசில் நாட்டுக்குழந்தைகள் காப்பகம் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் 12 பாலகர்கள் பரிதாபமாய் துடிதுடித்துப் பலியாகினர்.

இவர்கள் அனைவரும் 1 தொடக்கம் 3 வரையான வயதையுடைய குழந்தைகள் எனக் கூறப்படுகிறது.

இச்சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது,

மேற்படி காப்பகத்தில் குழந்தைகள் அனைவரும் உறக்கத்தில் இருந்தவேளையில் காப்பக கூரையில் பொருத்தப்பட்டிருந்த மின்சார விளக்கு திடீரென வெடித்துச் சிதறியது.

இதனால்ஏற்பட்ட தீயானது சொற்ப நேரத்திற்குள்ளாகவே காப்பகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவிக்கொண்டதால், தீயின் நடுவே காப்பகத்தின் உள் நுழைந்து எவராலும் குழந்தைகளைக் காப்பாற்ற இயலவில்லை.

எனினும் மேற்படி சம்பவம் விபத்தா, அல்லதுதிட்டமிட்ட சதியா என்பதுபற்றி ஆராயும் வகையிலான விசாரணைகளும் துரிதகதியில் இடம் பெற்று வருவதாகத் தெரிய வருகிறது. (உ)

# ராஜஸ்தான், குஜராத்தில் கடும் வரட்சி பெருமளவில் மக்கள்வெளியேற்றம்

(புதுடில்லி)

இந்தியாவின் எல்லையோர மாநிலங்களான ராஜஸ்தான், குஜராத் ஆகியவற்றில் கடும் வறட்சி நிலவுவதையடுத்து பெருமளவு மக்கள் அங்கிருந்து வெளியேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ் நிலையம், ரயில் நிலையம் போன்றவற்றில் பெருமளவு மக்கள் மூட்டைமுடிச்சுக்களுடன் காணப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும்இப்பகுதிகளில்வயிற்றோட்ட நோய் ஏற்படும் அபாயம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பஞ்சத்தையடுத்து மிருகங்கள் பெருமளவில் இறந்துள்ளதாகவும் ஆடு, மாடுகளின் எலும்புக்கூடுகள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பதாகவும் மேலும்அறியப்படுகிறது.

இதேவேளையில் இந்தியாவில் இன்னும் 12 வருடங்களில் குறைவான மழைவீழ்ச்சியே கிடைக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். [க]

# தமிழக மீனவர் மீது துப்பாக்கிச்சூடு

(சென்னை)

கச்சதீவுக்கருகே செவ்வாய் அன்று அதிகாலை மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் கடுங்காயங்களுக்கு உள்ளாகியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தின்போது படகோட்டியும் சிறுகாயங்களுக்கு உள்ளானதாகவும், இவர்கள் இருவரும் இராமநாதபுரம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (உ)

# மேற்கு வங்காளத்தில் வீசிய கடும்புயல் பொதுமக்கள் பலர் உயிரிழப்பு

(டாக்கா)

மேற்கு வங்காளத்தில் அண்மையில் வீசிய கடும் புயல் காரணமாக 25 பேர் உயிரிழந்திருப்பதாகத்தெரிய வருகிறது.

உயிரிழந்தவர்கள் அனைவரும் டாக்கா நகரவாசிகள் ஆனனும இருவர் ஆபத்தான நிலையில மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடும் புயல் ஏற்படுத்திய அனர்த்தங்களில் இருந்து மக்கள் மீள்வதற்கிடையில்அங்குபூகம்பம்ஒன்று ஏற்பட்டதாகவும் எனினும் இதனால் பலத்த சேதங்கள் எவையும் ஏற்படுவதில்லை எனவும் தெரியவந்துள்ளது. (உ)

# சாவகச்சேரி இந்துக்கல்லூரி திங்கள் முதல் இணுவிலில் இயங்கும்

## அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கள் முதல் இணுவில் மத்திய கல்லூரியில் இயங்கும் என மேற்படி கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

பிற்பகல் 1.30 முதல் 5.00 மணிவரை வகுப்புகள் இடம் பெறும் என்றும் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமப் பகுதியில் தங்கியிருக்கும் ஆசிரியர், மாணவர்களை எதிர் வரும் திங்கள் முதல்மேற்படிபாடசாலைக்கு சமுகம்கொடுக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் கல்வியை முன்னெடுக்கும் விதமாகவே இவ்வாறான மாற்றுஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வடமராட்சியில் தங்கியிருக்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் அங்குள்ள பாடசாலைகளில் கல்விபயின்று வருவதாகவும் மேலும்தெரிவிக்கப்படுகிறது. (க)

# பெற்றோலியப் பொருட்களின் விலை குறைப்பில் ஒபெக் நாடுகள் தீவிரம்

(வியன்னா)

பெற்றோலியம் உற்பத்தி செய்யும் ஒபெக் நாடுகளின் அமைச்சர்கள் ஒஸ்றியாவின் தலைநகர் வியன்னாவில் கூடி பெற்றோலியப் பொருட்களின் விலையைக் குறைக்கும் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள்.

மார்ச் மாதத்தில் 25 டொலர்களாக இருந்த ஒரு பீப்பா பெற்றோலின் விலை தற்பொழுது 33 டொலர்களாக அதிகரித்துள்ளதையடுத்து எரிபொருள் விலை குறைக்கப்பட வேண்டும் என்றும் குரல்கள் எழுப்பப்பட்டுள்ளன.

பிரித்தானியாவில் பெற்றோலின் விலை லீற்றருக்கு 75 பென்சாக இருந்து தற்பொழுது 85 பென்சாக உயர்ந்துள்ளது.

கடந்த மார்ச்சில் எண்ணெய் அகழ்வு அதிகரித்ததையடுத்து எரிபொருட்களில் விலை குறைந்து மறுபடியும் ஏறியுள்ளது.

இதனையடுத்து பாவனையாளர்களின் கண்டனங்களையும் தொடர்ந்து உற்பத்தியை அதிகரிக்க ஒபெக் நாடுகள் தீர்மானித்துள்ளன.

உற்பத்திகள் இன்னும் அதிகரிக்காது விட்டால் பாவனையாளர்கள் மாற்று வழிகளைக் காண நேரிடும். என்று மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

# தீவிரவாதிகள் கைது

பாகிஸ்தான் ஐ. எஸ். ஐ உளவு அமைப்பின் ஆதரவாளர்களான பயங்கரவாதிகள் இருவரை ஆயுதம் மற்றும் வெடிப் பொருட்களுடன்கைது செய்திருப்பதாக டில்லிப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (உ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி
2000/2001

மேற்படி கற்கை நெறி தொழிலாளர்களின் நலன் கருதி இவ் விண்ணப்பத்திற்கான முடிவுத்திகதி 15-07-2000வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மேலதிக விபரத்தை இணைப்பாளர், தொழிலாளர் கல்வி அலகில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
(கி/543)

# ஈச்சமோட்டைப் பகுதியில் மின்சாரம் முற்றாகத் துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டைப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது படிப்படியாக மீளக் குடியமரும் நிலையில் அங்கு மின்சார விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒருமணிநேர விநியோகம் கூடத்தற்போது இல்லை என்றும் ஒருமாதகாலமாக இந்நிலை நீடிப்பதாகவும் சம்பந்தப்பட்டோர் இது விடயத்தில் தாமதமற்றநடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கோரப்படுகிறது. (சி)

காணவில்லை

மட்டுவில் தெற்கைச் சேர்ந்தவரும், இடம் பெயர்ந்து தும்பளை பருத்தித்துறையில் வசித்துவந்தவருமாகிய சச்சிதானந்தம் சுகீவன் கடந்த 13-ம் திகதி உறவினரைப் பார்வையிட ஆவரங்கால் சென்ற பின்னர் அவரைக் காணவில்லை. அவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

ஆ. அருணாசலம்

இராமையா வளவு,
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.
[1189]

''ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம''

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் விக்கிரம வருடம் ஆனி மாதம் 9-ம் நாள் (23-06-2000) வெள்ளிக்கிழமை பி. ப, 12. 02 — 01 57 மணி வரையுள்ள சதய நட்சத்திர சுபமுகூர்த்த வேளையில்,

திரு. திருமதி ச. சின்னையா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்
திரு. கலைச்செல்வன்

திரு திருமதி பேரின்பராசா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி
செல்வி சுகந்தமலர்

இருவருக்கும் இறைவன் துணைகொண்டு லண்டனில திருமணம் நடைபெறுவதனால் அத்தருணம் திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறும் விஷேட அபிஷேகத்திலும் மதியபோசனத்திலும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி. ச. சின்னையா குடும்பம்
அம்மன் வீதி, திருநெல்வேலி.
(1193)

St. John's College &
Chundikuli Girls' College
JAFFNA.

க.பொ.த. (சாதாரண)பரீட்சை-டிசெம்பர் 2000
மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள்
யூன் 26 ம் 27 ம் திகதிகளில்

சென் ஜொன்ஸ் கல்லூரியில் காலை 9.00-11.30 மணிவரையும் யாழ்ப்பாணக் கல்லூரியில் மாலை2.00 -4.00 மணிவரையும் மாதிரி விண்ணப்பப் படிவங்களைப்பெற்று பூர்த்திசெய்து கையளிக்கவும்.

அதிபர்கள்
(1183)

ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும்ஏமாப்பு உடைத்து

குறள்

# வலம்புரி

## கல்வியில் தடங்கல்

மாகாண, வலய மட்டங்களில் இடப்பெயர்வால் தடைப்படும் கல்விச் செயற்பாடுகள் பற்றிச் சிந்திக்கப்படுகிறது. மாணவர்கள் இடையறாது சற்கும் வாய்ப்பை ஏற்படுத்தல், எதிர்கொள்ள வேண்டிய பரீட்சைகளுக்கு தயார்ப் படுத்தல், வகுப்பறைகள் இடம்பெயர்ந்தோரால் தடைப்படும் இடத்து மாற்று வழிகள் பற்றி மனிதாபிமானத்தோடு சிந்தித்தல்என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

சமூக மேம்பாட்டில் கல்வி கொண்டுள்ள வலுவான இடத்தைமறக்காது வளர்க்க வேண்டிய கடமைகளைச் சம்பந்தப்பட்டோர் சிந்திப்பதுஆரோக்கியமானதுதான். காலத்துக்குக்காலம் பல்வேறு அசெளகரியங்களுக்கு ஆளாகும் மாணவர்களுக்கு தக்க வழி முறைகளை காண்பதற்குசெயல்படும் அனைவர்க்கும் மாணவ சமூகம் நன்றியுடையவர்களாதல்வேண்டும்.

பெரும்பாலான பாடசாலைகள் இடம்பெயர்ந்தோரால் குடியிருப்புக்கு நிரப்பப்பட்டிருக்கின்றன மாதக்கணக்கில் மாணவர்கள் கல்வியை முறைப்படி கற்காது இருக்க முடியாது. எனவே கருணையுள்ளத்தோடு உரிய நிர்வாகிகளின் உதவியோடும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு சமூக சேவையாளர்களின் உதவியோடும் சீக்கிரம் மாற்றுத்திட்டமொன்றை ஆக்கியாக வேண்டும். இருப்பிட வசதிகளை செய்து இடம் பெயர்ந்தோரை ஆதரித்தால் மாணவர்கள் வழமை போல்கல்வியைத்தொடர முடியும். இதனைச் சிந்தித்துக் கொண்டிராமல் செயற்படுத்த முனைய வேண்டும்.

ஒரு காலப்பகுதியில் மின்சார வசதியில்லாத வேளையில் குப்பிவிளக்கில் பரீட்சைக்கு தயார்ப் படுத்தும் மாணவர்கள் கற்க மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெற்றது. அவ்வாறே தற்போதய சூழ் நிலையிலும் மாணவர்க்கு உதவ முன் வர வேண்டும்.

அண்மைக்காலமாக கல்வித்தலைவர்கள் பற்றியும் இடம்பெயர்ந்தோர்இருப்பிடமாற்றுத் திட்டம் பற்றியும் சிந்திக்கிறார்கள். ஆரோக்கியமான சிந்தனை காலத்தின் தேவையை உணர்ந்த உள்ள எழுச்சியுமாகும்.

- அன்புடன் ஆசிரியர்

அச்சுவேலிப்பகுதியில்

## விவசாயச் சம்மேளனங்களூடாக ம.எண்ணெய் விநியோகம்

(அச்சுவேலி)

மண்ணெண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டு நிலையைப் போக்கி விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் அச்சுவேலிப்பகுதியில் கிராம சேவகர்களின் உதவியுடன் விவசாயச்சம்மேளனங்களினூடாக விவசாயிகளுக்கு 5 லீற்றர் வீதம் நியாயவிலையில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை தற்சமயம் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருபவர்களும், விவசாய சம்மேளனத்தில் தம்மை அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளவர்களுமே இவ்வாறு மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக விவசாய சம்மேளன வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர். (சி-14)

## குடும்பஸ்தருக்கு எமனாக வந்த மது; கரம்பனில் சம்பவம்

(ஊர்காவற்றுறை)

மதுமயக்கத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றுக்குள் தவறிவிழுந்து மரணமடைந்த சம்பவம் ஒன்று கரம்பன் பகுதியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

மது அருந்திவிட்டு வீட்டுக்குச்சென்ற இந் நபர் நீர் அள்ளுவதற்குகிணற்றடிக்குச்சென்றபோது கிணற்றுக்குள் தவறி விழுந்து மரணமடைந்தார் எனத் தெரியவருகின்றது.

ஊர்காவற்றுறை கரம்பன் பகுதியைச்சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இ. இராசலிங்கம்(வயது-48) என்பவரே மரணமடைந்தவராவார்.

இவரைக்காப்பாற்றும்முயற்சியில் மனைவி, குழந்தைகள், ஈடுபட்டும்பயனற்றுப் போனது எனவும் தெரியவருகின்றது.

(சி-75)

## வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பு குடும்பஸ்தர் தன்னுயிர் மாய்த்தார்

### அனலை தீவில் சம்பவம்

வாழ்வில் ஏற்பட்ட விரக்தி காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்த சம்பவம் ஒன்று அண்மையில் அனலை தீவில் இடம் பெற்றுள்ளது.

அனலைதீவைச்சேர்ந்த க. திருஞானம்(வயது – 64) என்பவரே கிருமிநாசினி அருந்தி உயிரிழந்தவராவார்.

இவருடைய பிள்ளைகளில் ஐந்து பேர் வெளிநாடுகளில் உள்ளனர் என்றும் இருவர் அனலை தீவில் வசிக்கின்றார்கள் என்றும் அனலைதீவில் வசிக்கும் இருபிள்ளைகளும் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தெரியவருகின்றது.

(சி-75)

## இடம் பெயர்வால் தொழிலிழந்த குடும்பத் தலைவர்கள் பெருந்துயர்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமம், வடமராட்சிப்பிரதேசங்களில் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழ்கின்றகுடும்பங்களின் தலைவர்களுக்குப் போதிய தொழில்வாய்ப்புகள் இல்லாமையினால் பல்வேறு நடைமுறைப்பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப்பொருட்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, தமது வாழ்க்கையை முன்னெடுக்க முடியாமல் அவர்கள்திண்டாடி வருகின்றனர். (சி-77)

### தென்மராட்சியில் யுத்த அனர்த்தத்தையடுத்து

## பூட்டப்பட்ட நிலையில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள்

[தென்மராட்சி]

தென்மராட்சிப் பிரதேசத்தில் சுமார் 75 இந்து சமய வணக்கத்தலங்களும் 10 க்கு மேற்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்களும் எவ்விதமான கிரியைகளும், பூசைகளும் நடத்தப்படாமல் பூட்டப்பட்ட நிலையில் இருக்கின்றன எனத் தெரியவருகின்றது.

இப்பிரதேசத்தில் இருந்த அந்தணர்களும் கிறிஸ்தவ சமய பாதிரியார்களும், இடம் பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் தங்கியுள்ளனர்.

கச்சாய் வி கோரியார்தேவாலயத்தின் போதகரான வண பிதா. ஆனந்தகுமார் வன்னி சென்றுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

அதேசமயம், யுத்த அனர்த்தத்தால் சாவகச்சேரி சிவன் கோவில், மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில், மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவில், மீசாலை சோலை அம்மன்கோவில, விளைவேலி மருதடிப்பிள்ளையார் கோவில், சாவகச்சேரி துர்க்கையம்மன் கோவில், மட்டுவில் செல்லப் பிள்ளையார் கோவில், கைதடி கயிற்ற சிட்டி அம்மன் ஆலயம் உட்பட பல இந்து ஆலயங்களின் கட்டடங்கள் சேதமாகியுள்ளன எனவும் தெரியவருகின்றது. (77)

## அனலைதீவில் எரிபொருள் பெற இயலாது மக்கள் திண்டாட்டம்

(ஊர்காவற்றுறை)

அனலை தீவில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு மாதமாக இத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அனலைதீவு ப. நோ. கூ. சங்கத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக எரி பொருள் விற்பனை செய்யப்படவில்லை என அறியவருகிறது.

இதேவேளை அனலை தீவுப் போக்குவரத்துபடகு சேவைக்கான எரிபொருளினை ஊர்காவற்றுறைப் ப. நோ. கூ. சங்கம் வழங்குகின்றது.

மேற்படிதீவில்592 ற்குமேற்பட்டகுடும்பங்கள வசிக்கின்றார்கள் இவர்களுடையஎரிபொருள் தேவை பூர்த்தியாகுமா. எனமக்கள் அங்கலாய்க்கின்றார்கள். (சி-75)

## பாட்டாளி மக்கள் கட்சி, ம. தி. மு. க இரு கட்சிகளையும்தடை செய்யவேண்டும்

### காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டு கட்சிகளையும்தடை செய்ய வேண்டும். என தமிழ் நாடு ராஜீவ் காங்கிரஸ் மற்றும் இந்திரா காங்கிரஸ்ஆகிய இரு கட்சிகளும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

தேசிய ஜனநாயகமுன்னணியில் அங்கம்வகிக்கின்றமேற்படி இரு கட்சிகளும் இந்தியாவில் தடை செய்யப்பட்டிருக்கும் அமைப்பை ஆதரிப்பது குறித்தே இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இவ் இயக்கத்தினை ஆதரிப்போர் மீது உரியநடவடிக்கை ஏதும் எடுக்காமை குறித்து எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபடப் போவதாகதமிழ்நாடு ராஜீவ் காங்கிரஸ்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் தடை செய்யப்பட்ட இவ் இயக்கத்திற்கு ஆதரவான வகையில் செயற்படும் கட்சிகள் மீது உரியநடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாக மத்திய மாநில அரசுகள் மீதும் இக்கட்சிகள் கண்டனம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நெல்லியடி பொதுச்சந்தையில் அலைமோதும் மக்கள் கூட்டம்

(துன்னாலை)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்த மக்கள்பெருமளவில் தங்கியுள்ளதால் நெல்லியடி பொதுச் சந்தையில் மக்கள் கூட்டம் அலைமோதுகின்றது.

இச்சந்தையில் மீன் மற்றும் மரக்கறி வகைகளை வாங்குவதற்கு மக்கள் முண்டியடிப்பதை அவதானிக்க முடிகின்றது. (சி-41)


## யாழ். பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

**A | L 2001, 2002, 2000, Day**

கலை - வர்த்தகம்

| சனி. ஞாயிறு | 2001 | 2002 | 2000/Day |
|---|---|---|---|
| 8 — 9 | Eco / Geo | Acc / Dra | |
| 9 — 10 | Acc / Dra | Eco / Geo | |
| 10 — 11 | Com / Log | Acc / Tam | |
| 11 — 12 | Tam | Com / Hc | Log |
| 12 — 1 | H.c / Chr | Log | Tam |
| 1 — 2 | | Chr | Hc |

பொருளியல் 2000 Day

சனி - ஞாயிறு 11 - 12

செவ் - புதன் 12 - 2

மேற்தரப்பட்ட நேர அட்டவணையின் படி 18 - 6 - 2000 முதல் சகலவகுப்புகளும் நடைபெறுகின்றன.

(1181)

## இணுவில் பொருளியற் கல்லூரி

கே. கே. எஸ், வீதி, இணுவில்.

**A/L 2001, 2002**

வர்த்தகப் பிரிவு

| சனி - ஞாயிறு | 2001 | 2002 |
|---|---|---|
| 11 — 12 | | Acc |
| 12 — 1 | Acc | Com |
| 1 — 2 | Com | Eco |
| 2 — 3 | Eco | |

கலைப் பிரிவு 2001, 2002

வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன.

(1181)

**ECONOMICS: S. வரதராஜன்**

பிரத்தியேகவகுப்புகள் கண்டுக்குளி

எனது வகுப்புகள் பின்வரும் நிறுவனங்களில் நடைபெறுகின்றன.

1. பொருளியற் கல்லூரி - இணுவில்.
2. பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்.

| பிரிவு | யாழ்ப்பாணம் சனி - ஞாயிறு | இணுவில் சனி - ஞாயிறு |
|---|---|---|
| A / L 2001 | 8 - 00 | 2 - 00 |
| A / L 2002 | 10 - 00 | 1 - 00 |

முன்பு விட்டபாடத்திலிருந்து கற்பிக்கப்படும்

**ஆரம்பம்: 24 - 6 - 2000 சனி**

S. வரதராஜன்

(1181)

### புலிகளுக்கு---

பெற்ற சந்திப்பின் போதே இவ்விணக்கம் காணப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது காணி அதிகாரம், அதிகாரப் பரவலாக்கல் ஆகிய விடயங்களில் எந்த விதமுடிவும் எடுக்கப்படவில்லை.

உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்த யோசனை [illegible] எப்போது வரைவைப் புலிகளுக்கு அனுப்ப வைப்பதென [illegible] அவகாசம் எதுவும் தீர்மானிக்கப்படவில்லை என [illegible] ஐக்கிய முன்னணியின் [illegible] சருபாலா டி.பெ. ஜெயரத்தின [illegible].

### இடியப்ப....

அதிசரித்திருப்பதை எடுத்துக் காட்டும் வகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா நேற்று முன்தினம் இரண்டு இடியப்பங்களை தன்னுடன் பாராளுமன்றம் வரை எடுத்துச் சென்று உறுப்பினர்களுக்கு காட்டியுள்ளார்.

இந்த இரண்டு இடியப்பங்களையும் பாராளுமன்றத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் [illegible] சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார்.


## NOTICE

**DEPARTMENT OF SIDDHA MEDICINE**

UNIVERSITY OF JAFFNA

The lectures for the students in the Department of Siddha Medicine will recommence on 26th June 2000 at Medical Faculty.

REGISTRAR.

[C 548]


### மக்களுக்கு...

கூறினர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்கள் தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களின் தேவைகளை நிறைவேற்ற நிவாரணம் வழங்குவதற்கென உள்ளூரில் நெல் கொள்வனவு செய்வதற்கு நிதி உதவி வழங்குமாறு கோரினர்.

தற்போது அரசாங்கத்திடம் நிதி இல்லையெனக் கூறிய அமைச்சர் இவர்களுக்கான உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினதும் புனர்வாழ்வு அமைச்சினதும் அனுமதி பெற்றே பொருட்களை கொள்வனவு செய்து வழங்க வேண்டுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

திருமலைக்கும் பருத்தித்துறைக்குமிடையிலான கப்பல் சேவை சீராக நடைபெறாமையால் மக்கள்படும் அவலங்

### யாழ். மாநகர...

மௌலானாவைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டார்.

யாழ். மாநகரசபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்குரிய நிதியை [illegible] அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் அலவி மௌலானா ஜெயனிடம் உறுதியளித்தார்.

கள் குறித்து அரச அதிபர்கள் தெரிவித்த கருத்துக்கள் ஆராயப்பட்டு வாரத்தில் இரு தடவைகள் கப்பல் சேவை நடத்துவதாகவும் இக்கப்பல்களில் இராணுவத்தினரையோ ஆயுதங்களையோ எடுத்துச் செல்வதில்லை எனவும் அமைச்சரினால் கூறப்பட்டது.

அரசாங்க அதிபர்கள் [illegible] நேரம் தொடர்பாக உடனுக்குடன் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைச் சந்தித்து எடுத்துக் கூறவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது

## மரண அறிவித்தல்கள்

### வைத்திய கலாநிதி கபிரியேல ஜோர்ஜ் JP

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த வைத்தியகலாநிதி கபிரியேல ஜோர்ஜ் 22-06-2000 நேற்று வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி கபிரியேல் ஆரோக்கியத்தின் அன்பு மகனும், மரியாம்பிள்ளை கதரீன ஆகியோரின் மருமகனும், ஞானமலரின் அன்புக் கணவரும், எலிசபெத் ஞானேஸ்வரி, சாலஸ் ஞானேஸ்வரன, (பிரான்ஸ்), அன்றூ ஞானேஸ்வரன் (பிரான்ஸ்), அக்னேஸ் ஞானேஸ்வரி (பிரான்ஸ்) ஆன் ஞானேஸ்வரி (திருமலை), ஆஞ்சலோ ஞானேஸ்வரன் (கனடா) பிலிப் ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வில்லியம் மரியதாஸ், அன்ரன் மத்தியூஸ் (மாகாண சபை திருமலை), செபஸ்ரியன் டெனிஸ் (பிரான்ஸ்) இம்மாகுலேற் (பிரான்ஸ்) லெற்றீசியா ராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்ற அமலோற்பவம், மற்றும் லில்லி றோஸ், வைத்தியகலாநிதி G. எடவேட் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அருளானந்தம் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரி) வெலிச்சோர் ஆபரணம் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), பாவிலுப்பிள்ளை, மொனிக்கா, அஞ்சலீனா, ராணி, காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, மாகிறேட் ஞானப்பிரகாசம், மரியநாயகம் ஆகியோரின் மைத்துனரும், ஆதர், ஹென்றி, எட்வேட், கபிரியேலா, எட்பேக், கதரீனா, [illegible]னர்ஸ், கிறிஸ்ரீனா, யூஜின் ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற அருட்தந்தை யஸ்தஸ் சின்னப்புவின் அன்பு மைத்துனரும், அருட்தந்தை ஞா. அற்புதராஜா (அ.ம.தி.), அருட்தந்தை ஞ. அஸ்றின் (அ.ம.தி) ஆகியோரின் சிறிய தந்தையும், அருட்தந்தை வெ. ஜெறோம் (அ.ம.தி) அருட்தந்தை அ. றொபின்சன் ஆகியோரின் மாமனாரும் அருட்சகோதரன் பெ. யூட்குயின்ரஸின் பேரனும் குருமட மாணவர்கள் எட்வின் சேவியரின் பெரிய தந்தையும், பா. கிறிஸ்ரி நிர்மலராஜன், அருட்செல்வி. அ. விமலினி, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 24-06-2000 நாளை சனிக்கிழமை 9-30 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நடைபெற்று புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

ஜி பிலிப்ஞானேஸ்வரன் (குமார்)

மகன்

டாக்டர் சுப்பிரமணியம் றோட்,

சுன்னாகம்.

[1200]

### திருமதி மகேஸ்வரி சின்னத்தம்பி

புன்னாலைக்கட்டுவன் தெற்கு உடையார் வளவைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி சின்னத்தம்பி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சின்னம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னப்பா சின்னத்தம்பி(P H.I) அன்புத்துணைவியாரும், திருமதிசறோஜா பாக்கியநாதன் (ஆசிரியை G.T.M.S புன்னாலைக் கட்டுவன்), திருமதி ரஞ்சிதா தில்லைநடராஜா (கொழும்பு), திருமதி மல்லிகா சிவபாலன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), ஆனந்தா, ஜெயராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வித்தியா, விஜித்தா (வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்), தினந்தினி, வினோதினி, ஜவ்வதனி, மரஸ்வின் (கொழும்பு) ஆகியோரின் அன்புமிகு பாட்டியுமாவார்

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 23-06-2000 நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று விலங்கன்' மயானத்திற்கு 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி சறோஜா பாக்கியநாதன்

(மகள்)

உடையார் வளவு,
புன்னாலைக்கட்டுவன்.

[1217]


### நாளை ஆரம்பம்

கணக்கீடு

திரு. பாலவாசன்
B.B A, (F.M. Spl)
A/L 2002
தனி வியாபார
முடிவுக் கணக்கு
சனி, ஞாயிறு 7-8. a.m
விக்னா
கல்வி நிறுவனம்
(1196)

### ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்

இன்றுமுதல் குதூகல
ஆரம்பம்
விஜய். மந்த்ரா
சுவலக்சுமி
நடித்த
லவ் டுடே
காலை 10-30 மட்டும்
சனி, ஞாயிறு
10-30 — 2-00
[1191]

### நாகம்ஸ்

சுன்னாகம்

கார்த்திக், ரோஜா,
அஜித் நடித்த
இனிய பாடல்கள்நிறைந்த
உன்னிடத்தில்
என்னைக்
கொடுத்தேன்
(றீல்ஸ்)
11.00, 2.30 [பு.நே]
(கி/492)

### லஷ்சுமி

இணுவில்
(வெள்ளி மட்டும்)
எம்.ஜி.ஆர், லதா
நடித்த
உரிமைக் குரல்
10.30, 2.30 [ப.நே]
(கி/538)

### ஸ்ரீசெல்வா

யாழ்ப்பாணம்
கார்த்திக் ரோஜா
நடித்த
கண்ணன் வருவான்
10.00, 1.00[ப.நே)
(கி-499)


### கண்ணீர் அஞ்சலி

சின்னத்துரைக் குருக்கள் அன்னம்மா

அவர்கள் 21-06-2000 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சடையாளி,
காரைநகர்.
[கி-550]

K.S. இராமேஸ்வரன்
(அருள்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருள்நாயகி இராமலிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அருள்நாயகி இராமலிங்கம் அவர்கள் 22.06.2000 நேற்று காலமானார்.

இவர் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சட்டத்தரணி செல்லையா இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சறோஜினி (கணக்காளர், அமெரிக்கா), மீனலோஜினி, (சட்டத்தரணி) இரஞ்சினி (மட்டக்களப்பு, இராஜினி ஆகியோரின் அன்புத்தாயாரும் Dr R S தனபாலசுந்தரம் (கொழும்பு), திருமதி ஜீவநாயகி விஸ்வநாதன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற திருமதி செல்வநாயகி பாலச்சந்திரன் (கண்டி), Dr. செ. பாலசுந்தரம் (கொழும்பு) Dr ஞானேஸ்வரி ஸ்ரீ பாலசுப்பிரமணியம் (அவுஸ்திரேலியா), திருமதி கனகேஸ்வரி இராசரத்தினம் (கொழும்பு), Dr.இராஜேஸ்வரிபத்மானந்தா (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

ஸ்ரீதரன் (கணக்காளர், அமெரிக்கா) Eng திருஞானசம்பந்தன் (அபுதாபி), விஸ்வநாதன் மாவட்ட நீதிபதி, (மட்டக்களப்பு), பேராசிரியர் குமாரவடிவேல் (விஞ்ஞான பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

வருணேஷ் (அமெரிக்கா), நரேஷ் (அமெரிக்கா). திருவரங்க ஜனனி (மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), நயனி (இந்தியா), ஷிவாணி (இந்தியா), ஹம்சானந்தி (மட்டக்களப்பு), பிரணவன், குருபரன், நிருத்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24.06.2000 சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு 352, பருத்தித்துறை வீதி, நல்லூர். இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

352, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, நல்லூர்.
(1199)

தகவல்
பிள்ளைகள்.

### திருமதி பஞ்சரஞ்சிதம் ஈஸ்வரகுமார்

திருமதி பஞ்சரஞ்சிதம் ஈஸ்வரகுமார் 17-06-2000 சனிக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஈஸ்வரகுமாரின் (Eng U K) அன்பு மனைவியும், தனுசன், பகிதரன் (U K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோப்பாய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சேனாதிராசா, பொன்னாச்சிப்பிள்ளை (லண்டன்) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற விசுவநாதன் தம்பதியரின் (தெல்லிப்பழை கிழக்கு) அன்பு மருமகளும் ஆவார்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பங்களா லேன், மல்லாகம்.

திருமதி விஜயலட்சுமிமுருகதாசன்
[ஆசிரியை யா/கொழும்புத்துறைஇந்து ம.வி)
திருமதி ஜெகராஜலட்சுமி
அருமைநாயகம்

[1215]

இப்பத்திரிகை "வலம்புரி" அச்சகத்தாரினால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.